**செயற்பொறியாளர், நீஆது., திட்டம் & வடிவமைப்பு கோட்டம்,**
**திருச்சி-1, அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: பொறி.P.மூர்த்திராஜன், பி.இ.,**
**செயற் பொறியாளர், பொபது.நீஆது.,**

**செ.மு.எண்.நிஉ / 222 /2019/நாள்: 04.07.2019.**

பொருள் : பணியமைப்பு - த.நா.அரசுப் பணியாளர், தேர்வாணையம்,- தொகுதி IV - த.நா.அ.ப.தொ. - செல்வி.பொ.தீபா, (பிறந்த தேதி 22.05.1993) இளநிலை உதவியாளர் - போட்டி தேர்வு 2017-2018ன் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணியமர்வு செய்யப்பட்டவர் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் துவக்கி – ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1.செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் க.எண்:1150/PSD-H2/2019 நாள்:18.02.2019.
2.முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது மற்றும் தலைமைப் பொறியாளர், பொது, பொபது, சேப்பாக்கம், சென்னை, அவர்களின் செயல்முறை எண்.எஸ்3(3)/25366/ 2019/நாள்.25.02.2019.
3.தலைமைப்பொறியாளர், பொபது, திட்ட உருவாக்கம், நீஆது, சென்னை-5, அவர்களின் செ.மு.எண்:எஸ்.1(2)/0772/2019/ நாள்:08.03.2019.
4.கண்காணிப்பு பொறியாளர், பொபது. நீஆது, திட்ட உருவாக்க வட்டம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண்:695/2019/நி2/நாள்:08.03.2019.
5.இக்கோட்ட அலுவலகத்தின் செ.மு.எண்.நிஉ/222/2019/ நாள்:08.03.2019

******

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளர், அவர்களின் கடித எண்ணின் படி 2017-2018ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி IVக்கான போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு மேற்படி பார்வை 2 முதல் 5வரை காணும் செயல்முறை ஆணைகளின் படி நிலைஎண் 8 ரூ.19500 – 62000 என்ற ஊதிய ஏற்ற முறையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட

செல்வி.பொ.தீபா, (பிறந்த தேதி 22.05.1993) இக்கோட்டத்தில் இளநிலை உதவியாளராக 08.03.2019 மு.ப முதல் பணியேற்று பணிபுரிந்து வருகின்றார்.

தமிழ்நாடு சார்நிலை பணி விதி 23 (அ) ன் படி செல்வி.பொ.தீபா, இளநிலை உதவியாளர் பணியினை இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன் முறைபடுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், செல்வி.பொ.தீபா, இளநிலை உதவியாளர் அவர்தம் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 08.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு காலத் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகின்றார்.

இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிலைய புத்தாக்க அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் எவ்வித விடுப்பில் (தற்செயல் விடுப்பு மற்றும் மதசார்பு விடுப்பு நீங்கலாக) சென்றாலும் அதற்கேற்ப தகுதிகாண் பருவ நிறைவு காலத்திற்கான நீட்டிப்பு ஆணை பிறப்பிக்கப்படும்.

இந்த பணிவரன்முறை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளைக்குரிய நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்ற நிபந்தனைகளுடன் செல்வி.பொ.தீபா, இளநிலை உதவியாளருக்கு இக்கோட்டத்தில் பணியேற்ற நாளான 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொதுப், நீர்வளம்,
திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருச்சி.

பெறுநர்:
செல்வி.பொ.தீபா,
இளநிலை உதவியாளர்,
திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருச்சி.